போர் வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆவணி 13
சென்னை, 28—8—48

"மே. த. கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் சென்னை மீனம்பாக்கத்தில் ஆகாயவிமானத்திலிருந்து இறங்கியபோது அவரை வரவேற்க மடமடவென நடந்து முதல் வரிசைக்குச் சென்றார் காமராஜர். உடனே, "இதுவல்ல உமக்கு இடம்—போம் பின் வரிசைக்கு" என்று அவரைப் பிடித்துத் தள்ளினார் ஓர் உயர்தர போலீஸ் அதிகாரி. மனமுடைந்தவராய், காமராஜர், தலைகுனிந்தபடி வீட்டிற்குச் சென்றுவிட்டார்."

—பத்திரிகைச் செய்தி.

நாடு 1½ அணா.   வெளி நாடு 2 அணா

(7–ம் பக்கத் தொடர்ச்சி)

மிக மிகக் குறைவாக இருக்கலாம், அதற்கு அவர்களா பொறுப்பு? சட்டியில் இருப்பது தானே அகப்பையில் வரும்? அவர்களால் முடிந்த அளவு தானே அவர்கள் ஆட்சி செலுத்தமுடியும்? அந்தோ பரிதாபம், ஆளவந்தார்கட்கு நம் ஆழ்ந்த அனுதாபம்!

சர்க்கார் நம் தலைவர்களைச் சிறைச்சாலைக்குள் தள்ளியிருப்பது தமிழன் தொடுத்து நடத்தும் அறப்போர் காரணமாக அல்ல என்றும், ஆச்சாரியார் சென்னைக்கு வரும்போது, அவர்கள் வெளியே இருந்தால், நிலைமை கட்டுக்கடங்காது போய்விடும், எதிர்ப்பு வலுக்கும், ஆச்சாரியாருக்குக் காட்டப்படும் வெறுப்பு ஒன்று பத்து நூறாகப் பெருகும், அது அவருக்கு அவமானம், ஆகவேதான் அவர் வந்து போகும்வரை மட்டும் சிறையில் இருத்தப்பட்டுள்ளனர் நம் தலைவர்கள் என்று சிலர் கூறுகின்றனர். ஆச்சாரியார் சென்னைக்கு வரும்போது எழுகின்ற பேரெதிர்ப்பு அவருக்கு அவமானம் தரும் என்பது உண்மையானால் இப்போது, தென்னாட்டுத் தலைவர்களை சிறைவைத்துவிட்டுத்தான் அவர் தென்னாட்டில் பவனிவர முடியும் என்று ஏற்பட்டுவிட்டதே, இது என்ன அவருக்குப் பாராட்டா? ஒரு கவர்னர் ஜெனரல் தன் அதிகார எல்லைக்கு உள்பட்ட பிரதேசத்தில் எங்கேனும் ஓரிடத்திற்குச் சென்று, அங்குள்ள மக்கள் அவரை வெறுக்கிறார்கள், கறுப்புக் கொடி பிடிக்கிறார்கள், எதிர்ப்பு ஒலிகளை முழக்குகிறார்கள், என்ற நிலை ஏற்பட்டாலே அது அவமானம் தருவதுதான். ஆனால் இன்று நிகழ்ந்திருப்பதோ அது மட்டுமல்ல, அவர், தான் **பிறந்த இடத்திற்கு** வருகிறார், தன் சொந்த "மாகாணத்திற்கு" வருகிறார், அங்கேயே அவருக்கு எதிர்ப்பு சமாளிக்க முடியாத அளவுக்கு எழுந்திருக்கிறது. நாட்டுத் தலைவர்கள் அத்தனை பேரையும் சிறையிலே வைத்துவிட்டுத்தான் அவர் பவனி வரமுடியும் என்கிற நிலை இன்று ஏற்பட்டு விட்டது. இதைவிட அவமானம் வேறென்ன வேண்டும் ஒரு கவர்னர் ஜெனரலுக்கு?

சென்னை சர்க்காரின் நோக்கம் ஆச்சாரியாரை அவமானகரமான நிலையிலிருந்து காப்பாற்றுவது—அதற்காகத்தான் அவர்கள் தலைவர்களைக் கைது செய்தனர் என்றால், அவர்களின் நோக்கம் நிறைவேறவில்லை என்பதை, காணக் கண் படைத்த எவரும் கூறுவர். தலைவர்களைக் கைது செய்ததே—கைது செய்த பிறகுதான் அவர் தமிழகத்தில் வலம் வரமுடியும் என்ற நிலையை ஏற்படுத்தியதே—ஆச்சாரியாரின் மதிப்புக்கும் பெருமைக்கும் பெரியதோர் இழுக்குத் தேடித் தந்துவிட்டது என்பதை எவரும் மறுக்கமுடியாது. இதைவிட, வெறுப்புணர்ச்சியாளர்களை தங்கள் வெறுப்பை தாராளமாகக் காட்டுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டு, அவ்வண்ணம் மக்கள் தன்னை வெறுக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவும், தன்னை தென்னாடு வெறுப்பதற்குக் காரணம், தான் வடநாட்டவரின் பக்கம் நின்று தென்னாட்டை வடநாட்டுக்கு அடிமைப்படுத்தி வருவதே என்பதை உணர்ந்து கொள்ளவும் தான் தென்னாட்டுக்கு, இழைத்து வரும் அநீதி மன்னிக்க முடியாத மகத்தான குற்றம் என்பதை அறிந்துகொள்ளவும் அறிந்தபின் தன் தவறிய நடத்தையிலிருந்து மாறவும் அன்பர் ஆச்சாரியார் அவர்களுக்கு ஒரு நல்வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருந்தால் ஓமந்தூரார் சர்க்காரை நல்லறிவாளர் அனைவரும் பாராட்டி இருப்பர். அப்போது அவர்கள் செயல் ஜனநாயக நெறிமுறைக்கு ஒத்ததாகவும் இருந்திருக்கும்.

தலைவர்களைச் சிறைப்படுத்திவிட்டு, கவர்னர் ஜனரலை "உலா" வரச் செய்தார்களே நாட்டில், இப்போதாவது அவருக்கு அவமானம் குறைவாக இருந்ததா என்றால் அதுதான் இல்லை. கைதியானதைக் கேட்டு கொதிப்பேறிக் கிடந்த தமிழர்கள், தலைவர்கள் வெளியே இருந்தால் எவ்வளவு வெறுப்புணர்ச்சி காட்டப்பட்டிருக்குமோ அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமான வேகத்திலும் விறுவிறுப்பிலும் தங்கள் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டிக் கொண்டார்கள். 'எதிர்ப்பு' பிரம்மாண்டமான அளவிலும், எதிர்பாராத வேகத்திலும், கட்டுக் கடங்காத உணர்ச்சித் திறத்திலும் இருப்பதைக் கண்டு ஆச்சாரியாரே நெருப்பை மிதித்தவர்போல் விதிர்விதிர்த்து புடைபுடைத்து மிரண்டு திகைத்து அலறித் துடிதுடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது எனில் சர்க்காரின் "முன்னேற்பாடுகள்" எவ்வளவு பெருந் தோல்வி கண்டன என்பதை யார்தான் மறுக்கமுடியும்?

தலைவர் பெரியாரையும் தளபதி அண்ணாவையும் ஏனைய படைத் தலைவர்களையும் 'உள்ளே' தள்ளிவிட்டால் தமிழர் உணர்ச்சி குன்றிவிடும், ஆர்வம் அடங்கிவிடும், கருத்து மங்கிவிடும், கொந்தளிப்பு குறைந்துவிடும், உற்சாகம் ஒடுங்கிவிடும் என்றெல்லாம் மனக் கோட்டைகளை எழுப்பிய சர்க்காரின் எண்ணமும் பாழ்த்தது; கனவும் பொய்த்தது; தமிழர் தன்மானம் வென்றது; தமிழின் வீரம் நின்றது; ஆச்சாரியாரின் ஆணவம் சாய்ந்தது; ஓமந்தூராரின் ஓங்கார சொரூபமும் தோற்றது; ஆச்சாரியார் வடவர்தம் கைப் பாவையாக இருந்து தென்னாட்டின் நலத்திற்குக் கேடு சூழ்வது கண்டு தமிழர் உள்ளம் எவ்வளவு கொதிப்படைந்திருக்கிறது என்பதை "சென்னை" மிக மிக நன்றாக எடுத்துக் காட்டிவிட்டது, 23-8-48 திங்களன்று, சென்னை 'ஸ்டேடியம்' கூட்டத்தில்!

அன்று, கூட்டம் திரண்டதும், ஆச்சாரியாருக்கு ஏதோ ஒரு "சமஸ்கிருத மண்டலி"யின் சார்பில், செத்தொழிந்த வடமொழியில், புரியாத சொற்களால், வரவேற்புத்தாள் வாசிக்கத் தொடங்கினார் ஓர் ஆரியர்! உடனே குமுறி எழுந்தது மக்கள் மன்றம். குமுறல் புயலாயிற்று; பெரும் புயலாயிற்று. புயல் ஓய்வு ஒழிவு இன்றி சுழன்று சுழன்று வீசத் தொடங்கிற்று. ஆயிரமாயிரம் கருப்புக் கொடிகள் அடுத்த கணம் ஆச்சாரியார் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்துவிட்டன. "ஆச்சாரியாரே திரும்பிப்போம்" என்ற வல்லோசை வானைப் பிளக்க, வீறிட்டெழுந்தது.

பெரியார் வாழ்க, இந்தி ஒழிக, வடநாட்டுச் சுரண்டல் தொலைக என்னும் மூன்று பெரு முழக்கங்களும் உடனெழுந்தன இடியோசைகளென. இந்தமக்கட்கடலோசைக்கு நடுவே ஆச்சாரியாரின் சொல்லோசை கிணற்றில் வீழ்ந்த கல் போல அமிழ்ந்து போயிற்று. போலீசாரின் உறுமல், குண்டாந்தடியடி ஓச்சல், துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தல், மலபார் போலீசின் மமதைச் செயல் எல்லாம் தொடர்ந்து நடந்தன ஒவ்வொன்றாக! என்றாலும் என்ன? எவ்வளவு நேரம் கடலலையை குறுந்தடியால் அடக்க முடியும்? ஆச்சாரியார் கட்டுக்கு அடங்காது எழுந்த எதிர்ப்பு கண்டு அஞ்சினார்; திகைத்தார்; மிரண்டார், மயங்கினார்; என்னபேசுவது எப்படிப் பேசுவது என்பதறியாது விழித்தார்; இறுதியில் அன்றோர் நாள் அமைச்சராக இருந்து ஆணவக்குரல் எழுப்பினாரே, நள்ளிரவில் திடீரென்று திருடன் நம் வீட்டிற்புகுந்தால் எப்படியோ அப்படித்தான் இந்தி எதிர்ப்பாளர்மீது கையில் கிடைக்கும் எந்த ஆயுதத்தையும் எடுத்து வீசுவேன் என்று, அதே 'பாணி'யில், மனதிற்குத் தோன்றிய வார்த்தைகளை எல்லாம் சற்றும் ஆய்ந்தோய்ந்து பாராது, பொருத்தம் நிமித்தம் காணாது—காண்பதற்கு அவர்க்கு மனநிம்மதி எங்கே இருந்தது—எடுத்தெடுத்து வீசினார். நீங்களெல்லாம் முட்டாள்கள், நான் மட்டும் புத்திசாலி என்று, இதே வார்த்தைகளை, முடுக்கான தோரணையில், இப்படியும் ஒரு கவர்னர் ஜெனரல் பேசலாமா என்ற நினைப்பே அற்றவராய், தன் நிலை தான் அறியாமல், மனம் போன போக்கில் பேசலானார். ஆண்டவனை தன் வேலைக்காரன் என்றெண்ணிக் கொண்டு "உங்களுக்கு அறிவில்லை, ஆண்டவன் அதை உங்கட்குத் தருவாராக" என்று மமதையின் உச்சியில் நின்று கொண்டு, உன்மத்த வார்த்தைகளை, உதட்டெரிச்சலுடன் உதிர்க்கலானார். இறுதியில் தப்பிப்பிழைத்தது தம்பிரான் புண்ணியம் என்பது போல மூடிய காரில் மறைந்தபடி சென்று விட்டார்! அன்று அவர் நிலையைக் கண்ட எவரும் அந்தோ பரிதாபம் என்று கூறாமல் இருந்தனரில்லை. அந்த 23-8-48 ஐ ஆச்சாரியார் மறவார், தமிழர்களும் மறவார், ஆரியர்களும் மறக்க மாட்டார்கள், தமிழ் நாட்டு வரலாறும் மறவாது.

ஒரு புறத்தில் கார்ப்பரேஷன் ஸ்டேடியம்! அதற்கு சற்று தூரத்தில், எதிர்ப் புறத்தில், சென்னை சிறைச்சாலை! இங்கே, ஆச்சாரியார்! அதே நேரத்தில், அங்கே பெரியார்! இங்கே கொதிப்பு, அங்கே குளிர்ச்சி! இங்கே எதிர்ப்பு, அங்கே பாராட்டுதல்! இங்கே வெறுப்பு, அங்கே புகழ்ச்சி! இங்கே, ஆத்திரம் கொண்ட மக்களின் ஆர்ப்பாட்டக் குரல்! அங்கே அருமைத் தளபதிகளின் உற்சாக உரையாடல்! இங்கே, பல்லாயிரக் கணக்கான போலீஸ் காவலர்களின் பாதுகாப்பு இருந்தாலன்றி அப்புறம் இப்புறம் நகர அஞ்சும் கவர்னர் ஜெனரலின் பயங்கர பவனி! அங்கே தன் உயிருக்கு நேரிடக்கூடிய ஆபத்துகளைப் பற்றியோ உடலுக்கு வரக்கூடும் ஊறுகள் பற்றியோ ஒரு சிறிதும் கவலையற்ற உத்தமத் தலைவரின் **ஒன்பதாவது முறை சிறைவாசம்**! இங்கே இருப்பது அதிகாரம் ஆணவம் மமதை செருக்கு! அங்கே தவழ்வது அன்பு அமைதி சாந்தம் சமாதானம்! ஆச்சாரியார்—கவர்னர் ஜெனரல், ஆகவே நாடாள்பவர், நாடாளத் தெரிந்தவரே தவிர மக்கள் மனதை ஆளத் தெரியாதவர்! பெரியார்—கவர்னர் ஜெனரல் அல்ல, ஆனால் கவர்னர் ஜெனரல்களும் தன் காலடி வந்து பணிய வேண்டிய அளவுக்கு தியாகத் தழும்பேறிய உடலும் பகுத்தறிவுச் சுடர் ஏறிய உள்ளமும் படைத்தவர், ஆகவே ஆயிரமாயிரம் மக்கள் உள்ளத்தில் என்றும் அழியாத தன் அன்பு முத்திரையைப் பொறித்து விட்டவர்! ஆச்சாரியார் ஆகாய விமானத்திலே வருகிறார், மந்திரிகள் புடைசூழச் செல்கிறார், கமிஷனர்கள் கைகுலுக்க நடக்கிறார். "கல்கி" களின் ஆரத்தி கண்டு களிக்கிறார், மகத்தானதோர் அரண்மனையில் வசிக்கிறார், குட்டிக் குபேரர் என வாழ்கிறார்! ஆனால் பெரியார் இருப்பதோ சிறைச்சாலையில்! அவருடன் கைகுலுக்கிடும் பேறு பெற்றிடுபவர்களோ அன்னக் காவடிகள்! அவர் உலவுவது காட்டிலும் மேட்டிலும்! அவர் பவனியை ஏற்பன சேரியும் அங்குள்ள ஓட்டைக் குடிசைகளும்! ஆச்சாரியார் வந்தால் சர் ஆர்ச்சிபால்ட் நை வருகிறார் அவரை வரவேற்க! ஆனால் பெரியார் வந்தால் ஆர்ச்சிபால்ட் நை அல்ல வரவேற்பவர்—அவர் ஏன் வரவேற்கப் போகிறார் பெரியாரை—பெரியார் என்ன கவர்னர் ஜெனரலா அவர்தம் வரவேற்பைப் பெற—வரவேற்றால்தான் இந்த இலட்சிய வீரருக்கு அது என்ன ஒரு சிறப்பா—அவரை வரவேற்பவர்கள் ஆளவந்தார்கள் அல்ல ஆளப் பிறந்தவர்கள்—ஆனால் இன்று அடிமைகளாய் இருப்பவர்கள்!—ஆம், உழைத்து உழைத்து உருக் குலைந்தாலும் உண்ண உணவின்றித் தவிக்கின்ற ஏழைப் பாட்டாளிகள். அவர்களின் தொண்டர் அவர், தொண்டர் மட்டுமா இணைபிரியா நண்பர் அவர், நண்பர் மட்டுமா, நல்லதோர் வழிகாட்டியும் அவர்—வழிகாட்டி மட்டுமா, அல்ல அல்ல அவர்கள் பெற்ற ஒரே ஒரு காரல் மார்க்ஸ், ஒரே ஒரு புத்தர், ஒரே ஒரு சாக்ரடீஸ், ஒரே ஒரு சன்யாட் சென் அவர்! ஆச்சாரியார் அருமை நண்பர்தான் அவருக்கு, ஆனால் ஆச்சாரியார் போகும் பாதை அவருடைய பாதையுடன் தவறியும் சேர்வதில்லை, சேர முடியாது! ஆச்சாரியாரின் பாதை ஆதிக்கவாதிகளின் பாதை; ஆரிய ஆணவம் அமைத்துக் கொடுத்த பாதை, பத்தாம் பசலிகளுக்கு மனமகிழ்ச்சி தரும் பாதை, பிற்போக்குப் பாதை, ஆகவே அது புரட்சித் தலைவர் பெரியாரின் பகுத்தறிவுப் பாதையுடன் ஒன்று கூட முடிவதில்லை, அதில் வியப்புமில்லை தவறுமில்லை. ஆதிக்கப் பாதையில் சென்றார் ஆச்சாரியார்—கவர்னர் ஜெனரலானார், கவர்னர்களை நியமிக்கும் அதிகாரமும் பெற்றார், அரசரென வாழ்கிறார்! ஆனால் பாட்டாளிகளை வாழ்க்கையின் கூட்டாளிகளாக்கும் கரடு முரடான பாதையிலே, கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியிலே செல்கிறார் பெரியார்—எனவேதான் "சிறை" அவருடைய பொது வாழ்க்கைப் பயணத்திலே அடிக்கடி குறுக்கிடுகிறது.

இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!

பெரியார் சிறையிலே இருந்தால்தான் ஆச்சாரியார் தென்னாட்டில் கால் வைக்க முடியும் என்று ஓமந்தூரார் கருதுகிறார் என்றால், அது ஆச்சாரியாரும் அவருடைய கட்சியும் நாட்டிலே அடைந்துள்ள வீழ்ச்சியை மட்டுமல்ல, பெரியாரின் பெரும் படைக்குள்ள மூலபலத்தையும் சர்வ வல்லமை படைத்த சர்க்காரே கண்டு அஞ்சும் அளவுக்கு மக்கள் ஆதரவு பெரியார் பக்கம் இருக்கிறது என்ற அடிப்படை உண்மையையும்தான் அழகுற விளக்குகிறது. ஆம்! சர்க்காருக்கு பலம் பொருந்திய போலீஸ் இருக்கிறது, ஆபத்துக்கு உதவ பட்டாளம் இருக்கிறது! லண்டன் கிளை படைத்த பெரிய ஏடுகளின் கொட்டு முரசம் இருக்கிறது! இந்தியாவிலேயே பலமான கட்சி என்று புகழப்படும் காங்கிரஸ் நிறுவனத்தின் அமைப்பு பலம் இருக்கிறது, பிரசார பீரங்கிகள் ஏராளமாக இருக்கின்றன, பேச்சாளர்களோ கணக்கற்றவர்கள் இருக்கின்றனர், எழுத்தாளர்களோ எட்டுத் திசையெங்கும் இருக்கின்றனர், ஆற்றல் படைத்த ஆரிய வட்டாரத்தின் பஞ்ச தந்திர ஆயுதமும் அவர்கள் பக்கம்தான் இருக்கிறது, சட்டசபை இருக்கிறது, அங்கே கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கத் தக்க எம். எல். ஏக்கள் சபை நிறைய இருக்கின்றனர், எதிர்க் கட்சி நடவடிக்கைகள் அத்தனையையும் இருட்டடிப்புச் செய்யவோ எண்ணற்ற வசதிகள் இருக்கின்றன, இத்தனையும் தவறினாலும் சட்டம் இருக்கிறது, சட்டத்தை நிலைநாட்ட வழக்கு மன்றங்கள் இருக்கின்றன, அங்கே "நீதி"யை அளந்து வழங்க ஆயிரவர் ஆயிரவராக நீதி தேவர்கள் நெடுக இருக்கின்றனர், என்றாலும் சர்க்கார், தலைவர் பெரியாரைச் சிறையில் தள்ளினாலொழிய தான் வாழ முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டனர் என்றால், இந்த சர்க்காரின் முடிவு நாட்கள் நெருங்கிவிட்டன என்பதைத் தவிர சர்க்காரின் இந்த நடத்தைக்கு நாம் வேறென்ன வியாக்யானம் கூறமுடியும்?

ஆச்சாரியார் வருகையை ஒரு பூச்சாண்டியாக வைத்துக் கொண்டு, சென்னை ஆளவந்தார்கள், வெகு வேகமாக, நம் உயிரினும் இனிய ஜனநாயகத்தை மரணப் படுகுழிக்கு அழைத்து வந்துவிட்டார்கள். ஜனநாயகத்தின் தலை நாயகத்தை—பெரியாரை—வெஞ்சிறைக்குள் வாடத் தள்ளிவிட்டார்கள். மக்கள் சுதந்தரத்தை, மட்டு மரியாதையின்றி, வெட்டி வீழ்த்த முனைந்து விட்டார்கள். ஊர்வலமா, அனுமதி கிடையாது என்கிறார்கள்! கூட்டமா—நடத்தாதே என்கிறார்கள்! பேச்சுரிமையா—அப்படியென்றால் என்ன என்று கேட்கிறார்கள். எழுத்துரிமையா—ஏதுக்கு அந்தப் பொல்லாங்கு என்று வினவுகிறார்கள். பத்திரிகையா—கொடு ஜாமீன் என்கிறார்கள்! தலைவர்களா அடை சிறையில் என்று ஆர்ப்பரிக்கிறார்கள். தடியடியா—கொடு கொடு என்று கூவுகின்றார்கள்! கண்ணீர்ப் புகையா ஏவு ஏவு என்று கட்டளையிடுகிறார்கள்! துப்பாக்கிக் குண்டுகளா—தயாராய் வைத்திருங்கள் என்று தாக்கீது பிறப்பிக்கிறார்கள். வாரண்ட் இன்றி கைது, விசாரணையின்றி காவல், கால வரையறை இன்றி தண்டனை, ஈவு இரக்கமின்றி கொடுமை இவ்வளவும் செய்யத் துணிந்து களத்தில் இறங்கி விட்டார்கள் சர்க்கார். மக்கள் உரிமையை—உயிரினும் பெரிதென உத்தமர்கள் கருதிப் போற்றும் உயர் பொருளைத் துச்சமென்றெண்ணி துடுக்குடன் நடக்கத் தொடங்கிவிட்டனர். உரிமைக்கு ஆபத்து என்றால் அந்த ஆபத்தை வெட்டி வீழ்த்த வேண்டியது மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமை. இதில் கட்சி வேற்றுமை இல்லை. கருப்பு சிகப்பு கதர் என்றின்ன சட்டை வேற்றுமையும் இல்லை. சுதந்தரம் நமது பிறப்புரிமை. உரிமை வேட்கை நம் அனைவர்க்கும் பொது. எழுத்துச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம், கூட்டம் கூட்டும் சுதந்தரம், கொடுங்கோலர்களை வெறுக்கும் சுதந்தரம் அத்தனைக்கும் ஆபத்து வந்திருக்கிறது ஆளவந்தார்களின் ஆணவச் செயல்களால், அந்த ஆபத்தை முறித்துத்தள்ள, சிறையில் இருக்கும் நம் சிங்கஏறுகளை நினைவிலே கொண்டு, திராவிடப் பெருங்குடிமக்களே, திரண்டு வாருங்கள். இதுவரை தமிழுக்கும் இளம் பிள்ளைகளின் கல்விக்கும் தான் ஆபத்து என்றெண்ணி இருந்தோம். ஆனால் இதுபோது மக்கள் உரிமைக்கும் பேராபத்து மூண்டுவிட்டது என்பது நன்கு தெரிந்துவிட்டது. ஆகவே இதுபோது தமிழ்ப் பற்றாளர்களை மட்டுமல்ல, கல்விப் பற்றாளர்களை மட்டுமல்ல, உரிமை என்னும் உன்னத இலட்சியத்தினிடம் தணியாத காதல் கொண்ட திராவிடத் தீரர்கள் அத்தனை பேரையுமே அன்புடன் அழைக்கிறோம், வாருங்கள் வாருங்கள் உரிமைப் போராட்டத்தை நடத்த வாருங்கள் என்று! உரிமை இல்லாது உலகில் நடைப் பிணங்களென நாம் செத்து வாழ்வு வாழ்ந்து என்ன பலன்? அதைவிட, நம் உரிமைக்காக உன்னதமானதோர் போராட்டம் நடத்தி அந்தப் போராட்டத்திலே நாம் செத்து மடிந்தாலும் நாம் இல்லாவிட்டாலும் நம் சந்ததிகளாவது சுதந்தர வாழ்வு, வாழ்வர்; சுக வாழ்வு வாழ்வர். எனவேதான் நாம் அழைக்கிறோம், மிக மிகப் பணிவுடன் அழைக்கிறோம், குடியாட்சி உரிமையைக் காப்பது மனிதராய்ப் பிறந்த மாண்புடையார் அனைவரின் கடமையுமாகும் என்பதை நன்கறிந்த காரணத்தால் அழைக்கிறோம், கடமையைச் செய்ய வாருங்கள் என்றழைக்க உரிமை படைத்தவர்கள் நாங்கள் என்று நம்பிடும் காரணத்தினால் அழைக்கிறோம், உரிமைப் போர் விளைக்க உத்தமர்களே வருக வருக என! வாருங்கள்—வந்து உரிமைப் போர்க்களத்திலே வரிந்து கட்டி நில்லுங்கள்—வெல்வோம் அல்லது களத்திலே மார்பில் வடு ஏந்தி வீர மரணம் பெறுவோம்! வாழ்வு நமக்கு வெல்லமல்ல, ஆனால் உரிமை நமக்கு உயிர்—ஆம்! உரிமை நமக்கு உயிர்!—உறுதி!—உரிமை நமக்கு உயிர்!

உரிமை! உரிமை! உரிமை!
உரிமை போயின்,
உரிமை போயின்,
மரணம்! மரணம்! மரணம்!
வெல்க தமிழ்!
வாழ்க ஜனநாயகம்!

தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள்

தாய்மார்களை நடுக்காட்டில் தவிக்கவிட்ட அக்கிரமம்!

உள்ளத்தை கொதிப்பேறச்செய்யும் உன்மத்த நிகழ்ச்சி!

வெல்லிங்டனையும் நல்லவனுக்கும் படுமோச நடத்தை!

ஓமந்தூரார் சர்க்காரின் ஹிட்லரிச தர்பார்!

சென்னை ஆக. 27.

நேற்று சென்னையில் நடந்த சம்பவத்தைக் கேட்டால் மனித உள்ளம் படைத்த எவர் குருதியும் கொதிக்கும்; நரம்பு புடைக்கும்; தோள்கள் துடிக்கும்; வாய்கள், சர்க்காரை சபிக்கும். ஈவு இரக்கமற்ற கல் நெஞ்சனும் கூட இந்தச் சேதியறிந்தால் நெஞ்சம் நெக்குருகி கசிந்து கண்ணீர் மல்குவது நிச்சயம். நினைக்க நினைக்க, எண்ணிப் பார்க்கப் பார்க்க, உள்ளத்தை ஈட்டிமுனை கொண்டு குத்துவது இந்த சம்பவம்.

வழக்கம்போல் நேற்று காலை தோழியர் தனலட்சுமியார், (7-வயது சிறுவன் திராவிடமணியுடன்), துரைக்கண்ணம்மாள், பாப்பம்மாள், ஆகியோரும் தோழர்கள் ஆநந்தன், பாண்டியன், மாரியப்பன், நடராசன், கிருஷ்ணன், சீனிவாசன், கண்ணப்பன், கலைச்செல்வன் ஆகியோரும் மறியல் தொடங்கினர், மறியல் அமைதியாக நடந்தது. மறியலின் முடிவில் தொண்டர்கள் புறப்பட்டு, ஊர்வலமாகச் செல்லத் தொடங்கியதும், போலீசார் அவர்களைத் தடுத்து, ஊர்வலமாகச் செல்லக் கூடாது என்றனர். தொண்டர்கள் அது முடியாது, ஊர்வலமாகத் தான் செல்வோம் என்று கூறியதும், அப்படியானால் லாரியில் ஏறுங்கள் என்று கூறிவிட்டனர் போலீசார். லாரியைப் பின் தொடர்ந்துவந்த மக்களையும் நிறுத்திவிட்டு, போலீஸ்காரர்கள், லாரியை வெகு வேகமாக ஓட்டிச் சென்றனர் — போலீஸ் ஸ்டேஷனுக்கல்ல, அது நாகரிகமுள்ள சர்க்கார் செய்யும் காரியம், —இவர்கள் ஓட்டிச் சென்றது சென்னையிலிருந்து 30 மைல் அப்பால் உள்ள ஓர் சவுக்குக் காட்டிற்கு!

எங்கே போகிறது கார் என்பதையும் தொண்டர்கட்கு அறிவிக்கவில்லை, பட்டினியால் வாடி வதங்கும் தாய்மார்கட்கு உணவு தர வேண்டுமே என்ற கவலையும் அவர்களுக்குத் தோன்றவில்லை, ஆனால் போகிற திசை தொண்டர்க்குத் தெரியக்கூடாது என்பதற்காக காரை மட்டும் மிக மிக வேகமாக ஓட்டியிருக்கின்றனர்.

பகல் 1 மணி. கடும் வெய்யில் திக்குத் தெரியாத சவுக்குக் காடு. அங்கு திடீரென்று வண்டியை நிறுத்தி, யாராவது சிறு நீர் கழிப்பவர்கள் இங்கே இறங்கலாம் என்றாராம் சப்இன்ஸ்பெக்டர். தாய்மார்கள் மூவர் மட்டும் இறங்கினராம். மற்றவர்கள் இறங்காதது கண்ட இன்ஸ்பெக்டர், பெட்ரோல் இல்லை (!) — வண்டி போகாது — ஆண்களும் இறங்குங்கள் என்றாராம். அவர்களும் இறங்கியவுடன் நீங்கள் இங்கேதான் இருங்கள் என்று சொல்லிக்கொண்டே வண்டியைத் திருப்பி ஓட்டப் பார்த்த போது, தொண்டர்களும் தாய்மார்களும் நடப்பது என்ன என்றே தெரியாது திகைத்து நின்று விட்டனர். அவர்களில் தோழர் கலைச் செல்வன் உடனே முன்வந்து, இன்ஸ்பெக்டரைப் பார்த்து. "**எனக்குப் புரிந்து விட்டது, உங்கட்கு ரொம்ப வணக்கம், நல்லது போய்வாருங்கள்**" என்று புன்முறுவல் பூத்த முகத்தோடு கூறி கைகூப்பி வணக்கம் தெரிவிக்க, இன்ஸ்பெக்டர் தலைகுனிந்து, இத்தகு செயல் புரியத் தூண்டும் சர்க்காரின் ஹிட்லரிச தர்பாரை எண்ணி, பேசவாயின்றி, நாக்குழற, அசைவற்று சில நிமிஷம் நின்றுவிட்டாராம். பிறகு, ஒருவாறு தன்நிலை தான் பெற்று மௌனமாகவே எல்லா போலீசாருடன் வண்டியை ஓட்டிச் சென்று விட்டாராம்.

எட்டு மாத கர்ப்பிணி தனலட்சுமியாரையும் மற்ற இரு தாய்மார்களையும் பிற தொண்டர்களையும், விட்ட இடம் எது என்றும் சொல்லாமல், சென்னைக்குத் திரும்பும் வழி யாது என்றும் கூறாமல், வருவதற்குப் பணம் பைசாவும் கொடுக்காமல் பசிக் கொடுமை வாட்ட வாட்ட கொளுத்தும் வெயிலில், எப்படியேனும் செத்துமடியட்டும் என்று விட்டுவிட்டு போலீஸ்லாரி வேகமாகத் திரும்பிச் சென்றதும், தொண்டர்கள் ஓமந்தூர் சர்க்காரின் இந்த இரக்கமற்ற கொடுங்கோன்மையை நினைத்து நெஞ்சங் குமுறியவர்களாய் ஆனால் சிறிதும் அஞ்சாதவர்களாய், அந்த சவுக்குக் காட்டில் அலைந்து திரிந்து, உணவின்றித் தவித்து, இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு 'திசை' கண்டு பிடித்து, கர்ப்பஸ்திரீ உட்பட எல்லோரும் கடும் வெயிலில் காட்டிலும் மேட்டிலும் 12 மைல் தள்ளாடித் தள்ளாடி நடந்து, மாலை 6 மணிக்கு (அது வரை பட்டினியாகவே) கவரைப் பேட்டை என்ற சிற்றூருக்கு வந்து சேர்ந்தனர். அங்கிருந்து புறப்படும் பஸ்ஸில் தொண்டர்கள் ஏறச் சென்றபோது, பஸ்காரர்கள் ஏற்ற மறுத்துவிட்டனராம். அங்கிருந்த கட்டை வண்டிக்காரர்கள்கூட இவர்களை ஏற்ற அஞ்சி நடுங்கினராம். ஊரிலும், பொது மக்கள் பலர் இவர்களுடன் பேசவும் பயந்து ஒதுங்கினராம். காரணம் பல சி. ஐ. டி.க்கள் முன்னதாகவே அங்குச் சென்று இப்படிச் சிலர் வந்தால் அவர்கட்கு சோறு தண்ணீர்கூடக் கொடுக்கக்கூடாது என்றும் தங்க நிழலோ படுக்கப் பாயோ தரக்கூடாது என்றும் வண்டிகளில் தவறியும் ஏற்றக் கூடாது என்றும் மீறி உதவினால் கடுந் தண்டனைக்கு ஆளாக நேரும் என்றும் எச்சரித்திருந்தனராம். எனவே தொண்டர்கள் கையில் பணமற்ற நிலையில், உடல் சோர்ந்து தயங்கி மயங்கும் பரிதாப நிலையில் மேலும் மேலும் நடந்தே சென்னைக்குவந்தே தீருவது என்ற உறுதியுடன் நடக்க ஆரம்பித்தனராம். ஆனால் கருவுற்றிருக்கும் தனலட்சுமியாரையும் மற்ற இரு தாய்மார்களையும் பார்த்துப் பார்த்துத்தான் மனம் வருந்தி மாழ்கினராம்.

இதற்குள்ளாக, சென்னையில், திராவிடத் தலைவர்களும், இந்தி எதிர்ப்புக் கமிட்டியினரும், எல்லா கோர்ட்டுகளையும் சென்று பார்த்து சிறையிலும் சென்று பார்த்து,

(அடுத்த பக்கம் பார்க்க)

விடுதலை ஆயினர் வீரத் தலைவர்கள்!

களிப்புக் கடலில் குளித்தனர் தமிழர்!

மலர் மாலைக்குள் மூழ்கினார் மாவீரர் பெரியார்!

ஆற்றல் மிக்க திராவிடரின் ஆர்வம் மிக்க வரவேற்பு!

27—8—48 வெள்ளி பகல் 12½ மணிக்கு திராவிடத் தந்தை பெரியார் அவர்களும் தளபதி அண்ணா, ஆசிரியர் குருசாமி, தலைவர் வேதாசலம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, இளந்தலைவர்கள் ஏ. பி. ஜனார்த்தனம், ஈ. வி. கே. சம்பத் போன்றவர்களும், கே. கே. நீலமேகம், டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தம், பெத்தாம்பாளையும் பழனிசாமி. சி. டி. டி. அரசு, வேலூர் திருநாவுக்கரசு, கே. கோவிந்தசாமி முதலான நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களும் என். வி. நடராசன், காஞ்சி மணிமொழியார் முதலிய பத்திராசிரியர்கள் உட்பட, சென்ற ஞாயிறன்று கைது செய்யப்பட்ட நூற்றுவரும் திடீரென்று எத்தகைய முன் அறிவிப்புமின்றி விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

வீரத் தலைவர்கள் விடுதலை ஆகின்றனர் என்ற செய்தி கேட்டு, காலை 9½ மணிக்கே தற்காலிக சர்வாதிகாரி ஜீவரத்தினம், டாக்டர் கிருஷ்ணசாமி, மன்றம்—நெடுஞ்செழியன், போர்வாள்—இளஞ்செழியன், கதிரவன்—செல்வராஜ், புலவர் மயிலை சிவ. முத்து, ஆ. திராவிடமணி, ஈழத்தடிகள், சி. வி. ராஜன், பாவலர் அப்துல் காதர் முதலானவர்கள் சென்னை சென்ட்ரல் ஜெயிலுக்கு விரைந்து சென்றனர். அரை மணி நேரத்துக்குள் சென்னை முழுவதும், விடுதலைச் செய்தி காட்டுத்தீ போல் பரவி, ஏராளமான மக்கள் எண்ணற்ற மலர் மாலைகளுடன் சிறைச்சாலைக்கு ஓடோடி வந்தனர். விநாடிக்கு விநாடி, கூட்டம் குட்டி போட்டுக்கொண்டே இருந்து, 12 மணி அளவில், கூட்டம், சிறை வாயிலின் முன், சமாளிக்க முடியாத அளவு திரண்டுவிட்டது. ஒவ்வொருவரும் கையில் மலர் மாலையுடன் மனதில் அலைமோதும் மகிழ்ச்சியுடன், ஆவல் ததும்பத் ததும்ப, தலைவர்கள் விடுதலையை கணந்தோறும் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கி நின்றனர்.

12½ மணிக்கு சிறைக் கதவு திறந்தது. புன்முறுவல் பூத்த முகத்துடனே வெளிவந்தார் பெரியார். மீண்டும் மீண்டும் மாலைகள் சூட்டப்பட்டு, மலர் மாலைக் கடலுள் மூழ்கிய தெப்பமானார் மாவீரர் பெரியார். தள்ளாத வயதில், தமிழகத்தின் தன்மானத்திற்கு வெற்றி தேட, சிறைபுகுந்து மீண்ட சிந்தனைச் சிற்பியைக் கண்டதும் தமிழர் தம்மை மீறிய உணர்ச்சியுடன் பெரியார் வாழ்க, எங்கள் தலைவர் வாழ்க, திராவிடத்தைத் திருத்த வந்த தீரர் வாழ்க, புரட்சித் தலைவர் ஈ. வெ. ரா. வாழ்க என்றெல்லாம் பத்து நிமிடம் தொடர்ந்து முழக்கமிடலானர்.

வாழ்த்தொலி விண்ணைப்பிளக்க, அடுத்து வந்தார் அண்ணா அவர்கள். பிறகு வந்தார் ஆசிரியர் குருசாமி, அதன்பின் ஒவ்வொருவராக எல்லோரும் வந்தனர். ஒவ்வொருவரும் மலர் மாலைக் கடலுள் மூழ்கி எழுந்தனர். போலீஸ் லாரிகள் அவர்கள் எங்கு கைது செய்யப்பட்டார்களோ அதே இடத்திற்கு—பெரியார் மாளிகைக்கு அவர்களை அழைத்துச் சென்றன.

இவர்கள் அங்கு செல்வதற்குள் அங்கும் பெருங் கூட்டம் கூடி, ஆர்வமுள்ள வரவேற்பு அளித்தது

சென்னை நகரெங்கும் தலைவர்கள் விடுதலைபற்றிய பேச்சாகவே இருக்கிறது. தமிழர்கள் இந்த விடுதலைச் சேதி கேட்டு பெருங் களிப்புக் கொண்டிருக்கின்றனர். இவ்வளவு விரைவில் விடுதலை செய்யப்படுவர் என்று எவரும் எதிர்பாராததால், இந்த திடீர் சேதி மிக மகிழ்ச்சி அளித்திருக்கிறது மக்களுக்கு என்றாலும் இந்த விடுதலை தற்காலீகமானதே என்றும், மீண்டும் மிக விரைவில் சிறைபுகநேர்வது உறுதி என்றும், அடக்குமுறை இனி வரவர ஆயிர மடங்கு வலுப்படும் என்றும் தலைவர், தளபதி முதலானவர்கள் கருதுகின்றனர்.

உடனடியாக நிர்வாகக் கமிட்டி கூடி, விட்ட இடத்திலிருந்து போராட்ட மந்திராலோசனையைத் தொடர்ந்து நடத்தும் என்று தெரிகிறது.

இனி, அடுத்தடுத்து, பல ஆச்சரியகரமான சம்பவங்கள் நிகழ்வதும், சர்க்கார் பக்கத்திலிருந்து புதுப்புது பாணங்கள் கிளம்புவதும் சர்வ சாதாரணமாகி விடக்கூடும்.

எது வந்தால் என்ன! தமிழகம் தான் எத்தகைய அக்கினிப் பரீட்சைக்கும் தயாராயிருக்கிறதே!

✓ (முன் பக்கத் தொடர்ச்சி)

எங்கும் அத்தொண்டர்கள் காணப்படாததால், அவர்களைப் பற்றி ஒரு தகவலும் எட்டாததால், ஏதோ 'மோசம்' நடந்திருக்கிறது என்று எண்ணி, இரண்டு 'கார்'களை அனுப்பி சென்னையின் சுற்று வட்டாரங்கள் எங்கணும் சுழன்று சுழன்று தொண்டர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வழி தேடினர். இறுதியில இரவு 8-மணிக்கு கவரைப் பேட்டை அருகில், ஒரு கார், தொண்டர்களைக் கண்டு பிடித்து, ஏற்றிக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டு, 9-மணி அளவில் சென்னை சேர்ந்தது. காலை 7-மணிக்கு 'காபி' சாப்பிட்டவர்கள் இரவு 8-மணிக்குத்தான் முதல் உணவு எடுத்துக்கொண்டனர். 9-மணி வரை, என்னுயிற்றே, தொண்டர்கள் எங்குப் போனார்களோ, அவர்கட்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ என்ற 'ஏக்கம்' சென்னைத் தலைவர்களைப் பிடித்தாட்டிற்று தொண்டர்களை 9-மணிக்கு உயிரோடு கண்ட பிறகுதான் அவர்கள் தம் நிலை எய்தினர்.

இவ்வளவு கொடுமையும் இந்த 1948ல், சுயராஜ்ய சர்க்காரில், ஒரு தமிழர் முதலமைச்சராக இருக்கும் காலத்தில் நடந்திருக்கிறது. கொடுங்கோன்மையின் உச்சியில் ஏறி அமர்ந்துவிட்டது ஓமந்தூரார் சர்க்கார். இனி அது அழிந்தொழிவது நிச்சயம். ஈவு இரக்கமற்ற கொடுங்கோன்மையே, உன் பெயர்தான் ஓமந்தூரார் சர்க்கார்!

தொடர்கதை:

மனப்புயல்

இராதாமணாளன்

பதினெட்டாவது பகுதி

சிக்கிய இரு பறவைகள்

ஆற்றின் நீரில் அயர்வு இன்றி கோபால் படகு தள்ளிக் கொண்டிருந்தான். கரையிலிருந்த ஓர் ஆல மரத்தின் அடியில் கவலை நிறைந்த உள்ளத்தோடு குமார் சோர்ந்து உட்கார்ந்திருந்தான். இழக்கக்கூடாத தொன்றை இழந்து விட்டால் ஏற்படும் ஏமாற்றமும் ஏக்கமும் அவன் முகத்தில் நிழலாடின. சுருள் சுருளாக இருந்த அவனது தலைமயிர் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. பயானத்தில், இறந்தவரின் கல்லறையின் மீது கட்டப்படும் ஸ்தூபியைப் போன்றதோர் சித்திரத்தை சிறு குச்சுக் கொண்டு அவன் கை, தரையில் வரைந்தது.

தனிமையில் தளிர்மேனி குமுதம் தன்னிடம் இன்பமாக விளையாடியதெல்லாம் அவன் நினைவிற்கு வந்தது. இன்று அன்னியன் ஒருவனிடமும் அப்படித்தானே அவள் விளையாடிக் கொண்டிருப்பாள் என்றெண்ணியதும் இவன் இதயம் பிளந்து விடும்போல ஆகியது. "குமுதம்......ஒரு... துரோகி!" என்று திரும்பத் திரும்ப அவனது உலர்ந்த உதடுகள் முணுமுணுத்தன!

படகை ஆற்றின் ஓரமாகக் கட்டிவிட்டு, கோபால் குமாரின் அருகில் வந்தான். உணர்ச்சி அற்ற கண்களோடு ஏறிட்டு கோபாலைப் பார்த்தான் குமார். குமார் தீட்டிய மயானச் சித்திரத்தை, அப்பக்கமாக வாலை ஆட்டிக் கொண்டோடிய ஓர் அணில் அழித்து விட்டது. கோபால் தரையில் உட்கார்ந்தான்.

"குமார், சில நாட்களாக ஏன் மிகுந்த கவலையில் ஆழ்ந்தவனைப் போல் காணப்படுகிறாய்?"

"கவலையில் ஆழ்ந்தவனைப் போல அல்ல கோபால், கவலையிலேயே மூழ்கி விட்டேன். மூச்சுத் திணறிச் சாகப்போகிறேன்" என்று வெறுப்புக் கலந்த குரலில் குமார் பதிலளித்து விட்டு, கோபாலைப் பார்த்தான்.

"என்னால் உனக்கு இவ்வளவு தொல்லைகளும் வந்து விட்டன!"

"இல்லை கோபால், உன்னால் எனக்கு யாதொரு தொல்லையும் வரவில்லை. எனக்கு நானே தொல்லைகளைத் தேடிக்கொண்டேன். இன்றைக்கில்லாவிட்டாலும் பிறிதொருநாள் அதன் விஷப் பற்களுக்குப் பலியாவோம் என்பதை அறியாமல், பளபளப்பாக இருக்கிறதே என்றெண்ணி அதன் அழகில் ஏமாற்றமடைந்து நல்ல பாம்பைத் தடவித்தடவி கொடுத்தேன். தேன் இனிமையானது, அதனை விரும்பிப் பருகவரும் வண்டும் நல்ல குணம் கொண்டதாகத்தான் இருக்க வேண்டுமென்று நம்பி, அதனைப் பிடித்து விளையாடினேன்!......"

"குமார், நீ சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே!"

"என் வாழ்வு இன்று எனக்கே புரியாமல் இருக்கிறது கோபால்!"

"தெளிவாகக் கூறினால் நான் ஏதாகிலும் உதவி புரியலாம்."

"அதற்கு இனி யாருடைய உதவியும் வேண்டாம். சாவு என்னை அணைக்கவேண்டும். அதுதான் இப்பொழுது வேண்டும்!" என்று கூறியதும் குமாரின் கன்னங்களில் நீர்த்துளிகள் உருண்டன.

"கோபால் ஒன்றைமட்டும் ஒத்துக்கொள். அதுபோதும் எனக்கு!"

"சொல், குமார்!"

"பெண்களைப்பற்றிப் பரிந்து பரிந்து பேசுவாய் அல்லவா? நானும் அப்படித்தான் பிதற்றிக் கொண்டிருந்தேன். உண்மையின் ஒளியை இப்பொழுதுதான் கண்டேன். பளபளப்பான தோல் போர்த்த நல்ல பாம்புக் கூட்டம், பெண்கள்! உடல் இன்பம் என்னும் தேனைப் பருக வரும் விஷக் கொடுக்குகளைக் கொண்ட வண்டுகள், பெண்கள்! திடமனமற்ற, சஞ்சல குணம் கொண்ட மோசக்காரிகள், பெண்கள்! உடலை ஒருவனுக்கும், கருத்தை மற்றொருவனுக்கும் சொந்தமாக்கும் காதகிகள், பெண்கள்!........"

"குமார், வேண்டாம்! தாய்மார் கூட்டத்தைப் பழிக்காதே."

"தாய்மார் கூட்டமா? ஆ ஆ! தாசிமார் கூட்டமென்று கூறு மிக மிகப் பொருத்தமாக இருக்கும்!"

"யாரோ ஒருவரிடம் கொண்ட கோபத்திற்காகப் பெண்மையைப் பழிக்காதே. அறிவுலகம் இதனைக் கேட்டால், உன்னைத் தூற்றும்."

"உன் வாய் வேதாந்தத்தை நெருப்பில் போட்டுப் பொசுக்கு. அறிவுலகத்திற்கு அனுபவமே கிடையாது!! என் அனுபவத்தில் கண்டதைக் கூறுகிறேன், இது தான் உண்மை!"

"செய்தியை விளக்கமாக உரைத்தால்தானே, நான் ஏதாகிலும் பேசமுடியும்!"

"செய்தியை நீ அறிய வேண்டியதுமில்லை, அதன் பிறகு பேச வேண்டியதுமில்லை. முதலில் நீ தப்பித்துக்கொள்ள வழிதேடு!"

"என்ன?"

"ஆமாம், போலீஸார் நம்மைத் தேடிக்கொண்டு இங்கு வரப்போகிறார்கள். ஆகவே விரைவாக எங்கேயாகிலும் நீ போய் ஒளிந்துகொள்!'

"நீ மட்டும்!"

"என்னைப்பற்றிய கவலை இனி உனக்கு வேண்டாம். இனி நான் வாழத் தகுதி அற்றவன்! வாழ்ந்தாலும் பயனற்றவன்!"

"அது இருக்கட்டும், போலீஸார் நம்மைத் தேடிக்கொண்டு இங்கு

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை!

போர்வாள்

28—8—48 சனிக்கிழமை

ஆசிரியர் — சிறையில்!

நமது "போர்வாள்" ஆசிரியர்—எனது அருமைத் தந்தையார்—காஞ்சி மணிமொழியார் அவர்கள் சென்ற கிழமை சென்னை திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி கூட்டத்தின்போது, மற்ற தலைவர்கள்—நண்பர்களுடன் சர்க்காரின் விருந்தாளியாக அழைக்கப்பட்டு சிறைச்சாலை சென்றிருக்கும் காரணத்தால் அவர் சிறைமீண்டு வரும் வரை போர்வாளில் தலையங்கம் வெளிவராது என்பதை வாசக நேயர்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மா. இளஞ்செழியன்.

சிங்க ஏறுகள், சிறைக்கூடத்தில்!

ஆம்! ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த தமிழகத்தில் புரட்சிப் புயல் வீசச் செய்த அந்த புத்துலகச் சிற்பி பெரியார் இராமசாமி சிறைச்சாலையிலேதான் இருக்கிறார்!

தன் வெண்கலநாத சங்கீதக் குரலாலே செந்தமிழகம் முழுவதும் இன்னிசை கீதம் பரப்பிவந்த இளைஞர் தலைவர் அண்ணா அவர்கள் ஆளவந்தார்களின் நெஞ்சத்தைவிட மிக இறுகிப் போயிருக்கும் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னாலேதான் இருக்கும்படி செய்யப்பட்டு விட்டார்.

"விடுதலை" ஆசிரியராக இருந்து சுருக்கு சுருக்கென்று ஆட்சியாளர் உள்ளத்தைத் தைக்கும்படியான ஈட்டிமுனைத் தலையங்கங்களையும் குத்தூசிக் கட்டுரைகளையும் தீட்டிவந்த தீரர் குருசாமி பரந்த வானத்தையும் அகன்ற உலகத்தையும் ஆற்றல் திராவிடரையும் பார்ப்பதற்கின்றி, தன் எழுத்துகள் எனும் தூதுவர்மூலம் ஆண்மைத் தமிழருடன் நித்த நித்தம் உரையாடுவதற்கின்றி, சின்னஞ் சிறு சிறையிலேதான் அடைக்கப்பட்டுவிட்டார்!

தன் அனல் கக்கும் ஆவேச நடையால் தமிழகத்தைத் தட்டி எழுப்பி தலைநிமிர்ந்து நிற்கச் செய்து வரும் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியும் அந்த சர்க்கார் மாளிகையின் விருந்தினராகத்தான் அழைக்கப்பட்டுவிட்டார்!

குழந்தை உள்ளமும் அந்த உள்ளத்திலிருந்து குதித்தோடி வரும் கொச்சை மொழிகளும் படைத்தவராய், அமைதியின் சின்னமாய், அன்பின் நிலையமாய், திராவிடப் பண்பாட்டின் உயர்விற்கோர் எடுத்துக் காட்டாய், உத்தமத் தலைவராய் விளங்கி வந்த திருச்சி வேதாசலமும் 'உள்ளே' தான் கிடத்தப்பட்டுவிட்டார்!

நண்பர் நீலமேகம் போன்ற தளபதிகள், டாக்டர் தருமாம்பாள் போன்ற வீராங்கனைகள், ஈ. வி. கே. சம்பத் போன்ற இளைஞர் ஏறுகள், ஏ. பி. ஜனார்த்தனம் போன்ற டார்ப்பிடோக்கள், திருவோத்தூர் கோவிந்தன் போன்ற செந்தமிழ்ப் புலவர்கள், நம் "போர்வாள்" ஆசிரியர் காஞ்சி மணிமொழியார், "திராவிடன்" ஆசிரியர் என். வி. நடராசன் போன்ற பத்திரிகாசிரியர்கள் எல்லோரும் 'சிறை' எனும் அந்த இரும்பு முள்வேலிக்குள்ளேதான் இருந்து தீரவேண்டும் என்று ஆணையிட்டுவிட்டது அரசாங்கம்!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கான புது முறைகளை வகுப்பதற்காக நாடு முழுவதுமிருந்து திரண்டோடி வந்திருந்த சேனைத் தலைவர்களும் மாவட்ட அதிபதிகளும் சேல்விழி மாதர்களும் அவர் பெற்ற செந்தமிழ்ச் சிங்க ஏறுகளும் ஆக ஏறத்தாழ நூறு பேர்—தமிழகத்தின் தலைவர்கள், வழிகாட்டிகள், நண்பர்கள், ஞாசிரியர்கள், இன்ன பிறர்—சிறைக் கோட்டம் புகுந்துவிட்டனர், சிரித்த முகத்தோடு! சிறைச்சாலை என்ன செய்யும் என்ற கிண்கிணி கீதம் இசைத்த வண்ணம்!

நனியுண்டு நனியுண்டு காதல்—தமிழ்

நாமும் கேட்க விரும்புகிறோம்—சிறைச்சாலை என்ன செய்யும்? செந்தமிழர் சிந்தையைச் சிதைக்குமோ? இன்பத் தமிழின் வளர்ச்சிக்குத் தடை கிடத்துமோ? மக்கள் மன்றத்தில் மூண்டெழுந்துள்ள உள்ளக் கொதிப்பை அடக்குமோ? மலைபோலும் தோள் படைத்த மறத் தமிழர்தம் மாட்சிக்குக் கேடு விளைக்குமோ? நாட்டு மொழியைக் காப்பதற்கு நாலு திக்கிலிருந்தும் புற்றீசலெனப் புறப்பட்டு வந்திருக்கிறதே அணி அணியாக, கூட்டம் கூட்டமாக: பட்டாளம் பட்டாளமாக, அந்த திராவிடர் பெரும் படையின் உணர்ச்சிப் பெருக்கையோ உற்சாக எழுச்சியையோ உள்ளத்தின் உறுதியையோ செந்தமிழ்ப் பற்றையோ வெட்டிப் புதைத்திடல் ஆகுமோ? என் கருதினர் ஆட்சியினர்? தலைவர்கள் நூற்றுவரைச் சிறை வைத்துவிட்டால் அத்துடன் தமிழுணர்ச்சி தடைபட்டுவிடும் என்று எண்ணினர்? தமிழர் குலத்தின் தனித்தலைவர் பெரியாரை உள்ளே தள்ளிவிட்டால் பண்டைப் புகழ் படைத்த தமிழ் இனம் சுருண்டு மடங்கிவிடும் என்று நம்பினர்? தலைவர்களுக்குத் தரும் சிறைவாசம் தமிழர்தம் உள்ளத்திலிருந்து தமிழ்ப் பற்று எனும் உயர் பொருளை அகழ்ந்தெடுத்து எறிந்து விடும் என்று பொய்க் கனவு கண்டனர்? ஏன் வந்தது ஆளவந்தார்கட்கு இந்த மந்த மதியினம்?

"எமை மாட்ட நினைக்கிறதா சிறைச்சாலை? மாட்டட்டுமே, அதனால் என்ன? அது எமக்கு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை தானே!" என்று அறப்போர் தொடுத்துவிட்ட அடலேறுகள் பன்னெடுங் காலமாகவே பொன்மொழி புகன்றுவருவது ஆளவந்தார்கட்குத் தெரியாதா? சிறைவாழ்வு மட்டுமா ஏற்போம், செந்தமிழுக்கு வந்த ஆபத்தை முறித்துத்தள்ள பச்சை ரத்தமும் பரிமாறுவோம் என்று பாட்டாளிகளின் பட்டாளம், தளராத தமிழ்ப் பற்றிலே நீந்தி விளையாடிடும் தமிழ் வீரர்தம் அணிவகுப்பு, இடியோசை என வல்லோசை கிளப்பி வருவது சர்க்காரின் செவிகளுக்கு எட்டவில்லையா? ஒன்று தமிழ் தழைக்க வேண்டும் உற்றதோர் இந் நாட்டில், அல்லது செத்து மடியவேண்டும் சிங்கத் தமிழர் கூட்டம் என்று சூளுரைத்துவிட்டு, வருவது வரட்டும், புரிவது போர் ஒன்றே என்ற திட சித்தத்துடன் தீரப் போர் விளைத்து வருகின்றனரே தமிழர், அந்தப் போர்க்களக் காட்சியின் பொருள் இன்னது என்பது கூடவா புரியவில்லை இந்த ஓமந்தூரார் மந்திரி சபைக்கு? ஆம் புரியத்தான் இல்லை என்று கூறுவது போன்ற குறை மதிச் செயல்தானே தமிழ் நாட்டுத் தலைவர்களை இவர்கள் சிறை வைத்திருக்கும் சிறுமைத்தனம்!

கடல் அலையே அடங்கு என்றால் அது அடங்காது. தென்றலே வீசாதே என்றால் அது நிற்காது. நெருப்பே சுடாதே என்றால் அது குளிர்ச்சியுற்று விடாது. தேனே நீ இன்சுவை பயக்காதே என்று சாக்கீது பிறப்பித்தால், அதனால், தேன், தன் சுவை மாறிவிடாது. கருப்பஞ்சாறே நீ கெட்டுவிடு என்று ஓமந்தூராரே உரத்த குரலில் கார்த்திகேயனின் நாமத்தை உச்சரித்த வண்ணம் கூறினாலும் கருப்பஞ்சாறு இனிக்கத்தான் செய்யும். இவை இயற்கை. இந்த இயற்கைகளை மாற்ற முடியாது. இதுவே போலத்தான் தமிழர் தலைவர்களை 'சிறை' வைப்பதன் மூலம் தமிழ்மக்களின் உணர்ச்சிப் பெருக்கை அணைபோட்டுத் தடுத்துவிட முடியாது. இது அரசியல் பால பாடம். அதுமட்டுமல்ல! பொது வாழ்க்கை அரிச்சுவடி. இந்த பால பாடமும் பயிலவில்லை. அரிச்சுவடியும் அறியவில்லை ஓமந்தூரார்கள், ஆனால் பிரிட்டிஷ் துரைமார்கள், கப்பலேறுவதற்கு முன்னால், காட்டிலே தீட்டிவைத்த ஏகாதிபத்திய புராணத்தை அவசர அவசரமாக எடுத்து வாசிக்கின்றனர், அந்தச் செல்லரித்த ஏடு ஒரு துருப்பிடித்த துப்பாக்கி—அது கண்காட்சிப் பொருளாக வேண்டுமானால் இருக்கலாமே தவிர ஆபத்துக்குப் பயன்படாது என்பது நன்கு தெரிந்திருக்கும்! அவர்கள் என் செய்வர் பாவம்! அவர்களுக்குத் தெரிந்தது அந்தப் புராணம் ஒன்றுதான், ஆகவேதான் அதனை வாசிக்கின்றனர். சிறந்த ஏடுகள் பல உண்டு, உள்ளத்தை உணர்ச்சிக் காடாக்கும் இலக்கியங்கள் எத்தனையோ இருக்கின்றன, ஈரோட்டுப் பாசறைக்கு வந்தால் ஓமந்தூர் இராமசாமிகளையும் பெரியார் இராமசாமிகளாக மாற்றி அமைக்கக் கூடிய அவ்வளவு ஆற்றல் படைத்த புது வாழ்வுப் புத்தகங்கள் ஏராளமாக இருக்கக் காணலாம்; ஆனால், சர்க்கார், அந்த ஏடுகளைக் காண விரும்புவதுமில்லை, கண்டு அறிவுத்தெளிவு பெற ஆசைப்படுவதுமில்லை, அறிவுத் தெளிவு பெறவேண்டும்—அது நாடாள்வதற்குத் தேவையான முதற் பெரும் பண்பு என்ற எண்ணம் கூட அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை, அது வியப்பதற்கு உரியதுமல்ல, ஏனெனில் அவர்கள் ஆட்சிப் பீடம் ஏறியிருப்பதே தமக்கிருக்கும் அறிவையும் திறமையையும் நாடாளும் ஆற்றலையும் எடுத்துக் காட்டி அல்ல, எத்தனை முறை சிறை சென்றிருக்கின்றனர் என்ற கணக்குப் புத்தகத்தைக் காட்டி! சிறை, அவர்கள் தியாகத்திற்கும் தீரத்திற்கும் ஏற்ற எடுத்துக் காட்டாக இருக்கலாம், இருக்கிறது என்றே ஒப்புக் கொள்வதில் நமக்குத் தயக்கம் ஏதும் இல்லை, ஆனால் நாடாளும் திறமை இருக்கிறது என்பதற்கான உரைகல் சிறைக் கணக்கு அல்ல, நிச்சயமாக அல்ல! அதற்கு வேண்டிய அறிவும் திறமும் தனி. அதற்குப் பயன் படுத்தவேண்டிய உரை கல்லும் வேறுதான். அந்த உரை கல்லில் இந்த சர்க்காரை உரைத்துப் பார்த்தால், பிறகு, இது மிஞ்சி நிற்கும் என்று எவரும் கூறத் துணியார், அந்த அளவுக்கு காட்டாட்சி முறைகளில் நாளும் நாளும் வழுக்கி வீழ்ந்திருக்கிறது இந்த ஆட்சி, ஆகவேதான் நாம் கூறுகிறோம் அவர்களின் மந்த மதி கண்டு நாம் பரிதாபப்பட வேண்டுமே தவிர கொதித்தெழுந்து கொக்கரித்து அவர்களைக் குறைகூறத் தேவை யில்லையென்று! அவர்கள் என் செய்வர் பாபம், அவர்களுக்குத் தெரிந்த அளவு நாடாள்கின்றனர், அவர்களுக்குத் தெரிந்த அளவு

(2-ம் பக்கம் பார்க்க)

நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்!

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

வருவார்களென்று உனக்கு யார் கூறியது!"

"யார் கூறியதா? அந்தக் கண்கள் கூறின! ஓகோ! கோபால், உனக்கு நான் சொல்லவே இல்லையா?" என்று குமார் கூறிக்கொண்டே ஆச்சரியத்தோடு கோபாலைப் பார்த்தான்.

ஆம், குமுதத்திற்கு மணமாகிவிட்டதென்ற செய்தியைக் கேள்விப்பட்டது முதல் உலகையே அவன் மறந்து விட்டான். ஆரியனின் கண்களில் தான் சிக்கிவிட்டதையும், "பயல்களே, உங்களைப் பழி வாங்காமல் விடமாட்டேன்!" என்று வஞ்சகனின் கண்கள் அவனிடம் உரைத்ததையும் கோபாலிடம் அவன் கூறவில்லை.

கோட்டீஸ்வரய்யரைத் தற்செயலாகத் தான் சந்தித்ததையும், படகோட்டியைப் போல நடித்து அந்தப் பார்ப்பனன் அடையாளத்தைக் கண்டுபிடித்து விட்டதையும், தன்னை யார் என்று தெரிந்துகொண்ட பிறகும், நடிப்பையே பிறவிக் குணமாகவும், பிழைப்புத் தொழிலாகவும்கொண்ட இனத்தில் வந்த அவன் யாதும் அறியாதவனைப் போல சென்று விட்டதையும், விளக்கமாக, குமார், கோபாலுக்குக்கூறினான். இதனைக்கேட்ட கோபால் பெருமூச்சு விட்டான்.

"கோபால், இந்நேரம் கோட்டீஸ்வரய்யர் எவ்வளவோ வேலைகளைச் செய்து விட்டிருப்பான். நம்இனத்தை ஒழித்துக் கட்ட அவன் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான். இதனை நீ நன்கு அறிவாய், ஓடு, ஓடு விரைவாக. எங்கேயாகிலும் சென்று தப்பித்துக்கொள்!"

"நீ!"

"நானா, வாழப் பிறந்தவனல்ல நான். சாகப் பிறந்தவன். அதிலும் இதயம் சிறுகச் சிறுக அழுகி அழுகி மாளப்பிறந்தவன்." அவன் கண்களில் நீர் நிறைந்தது.

"உன்னைவிட்டு, நான் செல்வேனா! ஒரு போதும் முடியாது! தப்பினால் இருவரும் தப்புவோம், சிக்கினால் இருவரும் சிக்குவோம்!" என்று கோபால் கூறியதும்,

"தப்புவதா? இனி ஏது?" என்று கூறி, இடியோசையைப் போல ஓர் குரல் உரக்கச் சிரித்தது. திடுக்கிட்டு இருவரும் எழுந்து பார்த்தனர். சிவன் கோயில் பொதி மாட்டைப்போல கோட்டீஸ்வரய்யர் நின்று கொண்டிருந்தார். அவருகே காளிமுத்து இருந்தான்.

குமாரை இழுத்துக் கொண்டு கோபால் ஓட முயற்சித்தான். "ஓடினால் தப்ப முடியாது! எப்பக்கமும் போலீஸ்!" என்று கூறி, அய்யர், வீட்டின் சுவர் இடிந்து சரிவதைப் போல கலகலவென உரக்கச் சிரித்தார்.

குனிந்த தலையோடு குமார் நின்றிருந்தான். கனல் கக்கும் விழிகளால் கோபால் அய்யரைப் பார்த்தான். சூழ்ச்சியையே பிறப்புரிமையாய்க் கொண்ட வஞ்சகன் ஆணவத்தோடு கேலிப் பார்வையை கோபால் மீது வீசினான்.

போலீஸார் என்னும் வேடுவர்கள் விரைந்து ஓடி வந்தனர். சிறகொடிந்த இருபறவைகளைப்போல, கோபாலும் குமாரும் அவர்களிடம் சிக்கினர்.

தன் அண்ணனும், இதய வீணையை மீட்டி விட்ட காதலனும் போலீஸாரிடம் சிக்கி, சிறையில் வாடுகின்றனர் என்பதை அறிந்ததும், வேணி கண்ணீர் உகுத்துக் கதறி அழுதாள். அவளது கன்னி உள்ளம் கரை காணாத் துக்கத்தால் தவியாய்த் தவித்தது! அழுது அழுது நாட்களை அவள் விரட்டி அடித்தாள்!

நோயால், படுத்த படுக்கையாய்க் கிடந்த சிவனுக்கு வேண்டிய பணிகளைச் செய்து கொண்டிருந்த குமுதம் குமார் பிடிபட்டான், சிறையில் அடைபட்டான் என்பதைப் பத்திரிகையில் கண்டதும், அவள் உள்ளம் தீயில் சிக்கிய புழுபோல் துடிதுடித்தது. கதறி அவள் அழவில்லை ஆனால் கண்ணீர் அவள் கன்னங்களில் வழிந்தோடுவதினின்றும் ஒரு கணமும் ஓயவில்லை. மனப் புயலில் சிக்கிய படகானாள் மங்கை.

(தொடரும்)

அறம் வளரும் நாட்டினிலே சோறு கேட்டால்
அடி உதைகள்! அசோகரின் சாந்த மார்க்கம்
பறக்கிறது கொடியினிலே! ஏழை மக்கள்
பட்டினிக்கு அடக்குமுறை உணவுபோலும்
என்கிறார் கவிஞர் தமிழ் ஒளி படியுங்கள்

1. நீ எந்தக் கட்சியில்? விலை 0 4 6
(சிறந்த கவிதைத் தொகுப்பு)

2. மார்க்ஸ் தத்துவமும் விலை 0 4 0
தோழர் இஸ்மத்பாஷா எழுதியது (கட்டுரை)

3. நீயும் நானும் அச்சில்
தோழர் ரகுநாதன் (உன்னதக் கதைகள்)

வெளிவருகிறது!

OUR LENIN For Boys & Girls
மொழி பெயர்ப்பு: ந. அம்பாள்

விற்பனையாளருக்கு நல்ல கமிஷன். தனிப்பிரதிகள் முக்காலணா ஸ்டாம்ப் சேர்த்து அனுப்பிப்பெறலாம்.

உண்மைப் பிரசுரம்
தேவகோட்டை, RD. Dt.

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே

சிறைக்கு அஞ்சாச் சிங்கம்!

பெரியார், இதுபோது, சிறையிலே இருக்கிருர், இருக்கும்படி செய்யப்பட்டு விட்டார் இன்றைய "சுதந்தர" சர்க்காரால்! அந்த சிந்தனைச் சிற்பியைச் சிறைவைத்தால் அவர் நாட்டிலே மூட்டியுள்ள புரட்சிப்புயல் சிதைந்துவிடும் என்றெண்ணுகிறது சர்க்கார், எனவே சிறை வைத்துவிட்டது! சர்க்காருக்கு அந்த எண்ணம் வருவது சகஜம், ஏனெனில் சர்க்காரின் அமைப்பு அப்படிப்பட்டது! எனவே குற்றம் சர்க்காருடையதல்ல, சர்க்கார் அமைந்துள்ள அமைப்பு முறையினுடையது! அந்த முறை நாம் வகுத்ததல்ல, ஜனநாயகம் வளர வேண்டும் என்ற நல்லெண்ணம் படைத்த நல்லோர் எவரேனும் வகுத்துக் கொடுத்ததுமல்ல, வெள்ளையனின் துப்பாக்கிமுனை இந்த நாடாண்ட காலத்தில் சர்ச்சில் துரைகள் ஏகாதிபத்திய சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டே, ஆணவம் என்ற செங்கற்களால் அடுக்கிக் கட்டிய கட்டிடம் அதிகார போதை எனும் "சிமெண்ட்" பூசப்பட்ட இன்றைய ஆட்சி முறை! வெள்ளையன் வகுத்துக் கொடுத்த இந்த ஆட்சி முறையின் கீழ் யார் அமைச்சர்களாக இருந்தாலும் அவர்கள் நீதியைத் துணைக்கொண்டு ஆளமுடியாது, சிறைச்சாலை மதிற்சுவரை நம்பித்தான் நாடு ஆளவேண்டும். ஆகவேதான் நாம் கூறுகிறேம் பெரியாரை ஓமந்தூரார் சிறையிட்டிருப்பது, அவர் குற்றமல்ல, ஆட்சி முறையின் குற்றமென்று!

குற்றம் யாருடையதானாலும்—அது சர்க்காருடையதானாலும் அல்லது அந்த அமைப்பு முறையினுடையதானாலும், ஓமந்தூராருடையதானாலும் அல்லது அவரை ஆட்டிப் படைக்கும் டில்லி தேவதைகளுடையது ஆனாலும் — பெரியாரைச் சிறை வைத்திருப்பதன் மூலம் அவர்கள் எந்த நோக்கம் நிறைவேறும் என்று நம்புகிருர்களோ அது நிறைவேருது—நிச்சயம் நிறைவேருது. "சிறை"க்கு, மக்கள் எழுச்சியை அடக்கும் ஆற்றல் எப்போதுமே கிடையாது. மாருக, கிளர்ச்சித் தீயை வளர்க்கும் நெய்யாக இருப்பதுதான் சிறைச்சாலையின் இயல்பு. இதனை மற்றவர்களைவிட இன்றைய மந்திரிகள் நன்கறிந்திருக்க வேண்டும்! ஏனெனில் இவர்கள் மாஜி கைதிகள்! இன்று மந்திரிகள்! சிறை வாழ்க்கை, இவர்களை, சாதாரண ஆட்கள் என்ற நிலையிலிருந்து கைதிகள் என்ற பட்டப்பெயர் சூட்டி, பிறகு மாஜி கைதிகளாக்கி, இன்று மந்திரிகளாகவே ஆக்கிவிட்டது. சிறைக் கோட்டத்தின் இயற்கையே அதுதான்! சிறை எந்த மக்கள் எழுச்சியைச் சிதைக்க வேண்டும் என்பதற்காக ஆளவந்தார்களால் கட்டப்பட்டிருக்கிறதோ அந்தக் காரியத்தைச் செய்ய அதனல் ஒருபோதும் முடிவதில்லை. வெள்ளையன் இவர்களைக் கைதியாக்கியபோது நிச்சயமாக அவன் எண்ணித்தான் இருப்பான், இந்தச் சிறை வாழ்க்கையோடு இவர்களுடைய அரசியல் எழுச்சி தொலைந்தது என்று! ஆனல் தொலைந்தது அரசியல் எழுச்சி அல்ல, அதை அடக்க நினைத்த ஆங்கிலேயன் ஆட்சி! இதனை எண்ணிப் பார்த்திருக்க வேண்டும் சென்னை சர்க்கார், எண்ணிய பிறகே பெரியாரைக் கைதியாக்கத் துணிந்திருக்க வேண்டும்.

பெரியார் சிறை செல்லுவது—சர்க்காருக்கு நினைப்பூட்டவிரும்புகிறேம்—இது முதல் தடவை அல்ல, ஒன்பதாவது தடவை சிறை அவருடைய பொது வாழ்க்கையையும் அதன்விளைவாகநாட்டிலேதோன்றி வரும் புத்தெழுச்சியையும் அடக்கவும் 'ஆற்றல்' படைத்ததாக இருந்தால், அவர், எப்போதோ பொது வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும், ஆனல் நிலைமை அப்படி இல்லை, துவக்கத்தில் தன்னந் தனியாக பொது வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபட்ட அவர், இன்று தமிழகம் முழுவதுமே அவர் சொல்வழி நிற்கும் அளவுக்கு பலம் பெற்று இருக்கிருர், அவர் இதுவரை அனுபவித்திருக்கும் எட்டு சிறைத் தண்டனைகளும் அந்த பலத்தைப் பெருக்கும் பணியைச் செய்திருக்கின்றனவே தவிர அதனைச்சற்றேனும் குறைத்ததில்லை—குறைக்க முடிந்ததில்லை—எப்படி முடியும், சிறைக்குத்தான் அத்த ஆற்றலே கிடையாதே!

பெரியார் இதுவரை எவ்வெப்போது எதுஎதற்காகச்சிறைப்பட்டிருக்கிருர் என்ற விவரத்தை இங்கே தருகிறேம், சிறை, பெரியாரின் பெருந் தொண்டை எந்தக் காலத்திலும் குறைக்கவோ நிறுத்தவோ முடிந்ததில்லை என்பதை சர்க்காருக்கு உணர்த்த, உணர்ந்து அவர்கள் திருந்த!

முதல் முறை சிறைவாசம்: 1921ல் ஈரோட்டில் பெரியார் தலைமையில் கள்ளுக்கடை மறியல். நகரெங்கணும் பெருங் கொந்தளிப்பு, யார் யார் வாயிலும் அதே பேச்சு. மறியல் மிக மும்முரமாக நடைபெற்று வந்தது. நிலைமை நாளுக்கு நாள் நெருக்கடியாகக் கண்ட சர்க்கார் 144 தடையுத்தரவை வீசினர். அதை மீறினர் பெரியார் எண்ணற்ற தொண்டர்கள் புடை சூழ! உடனே சிறை பிடிக்கப்பட்டார். பிறகு அவர் தங்கை கண்ணம்மாளும் வாழ்க்கைத் துணைவியார் நாகம்மையாரும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி 144 ஐ முறியடித்து வெற்றி மாலை சூடினர். இந்தியாவிலேயே கள்ளுக்கடை மறியல் செய்யப்பட வேண்டுமென்று முதன் முதலில் முடிவு செய்யப்பட்டது பெரியார் வீட்டில்தான். உத்தமர் காந்தியார் முதலிய தலைவர்கள் அங்கு கூடித்தான் அந்த முடிவுக்கு வந்தனர். கள்ளுக்கடை மறியல் மிக வெற்றிகரமாகநடைபெற்றதும் சர்க்காரே முன்வந்து 144 உத்தரவை வாபஸ் வாங்கியதும் ஈரோட்டில்தான். ஈரோட்டுப் போராட்டத்தின் காரணமாக பெரியாரின் புகழ் தமிழ்நாடு முழுவதும் ஒளிவீசிற்று. அவர் தொண்டு வடநாட்டுத்தலைவர்களாலும் பாராட்டப்பட்டது.

இரண்டாம் முறை சிறை வாசம்: மலையாளத்தில் வைக்கம் என்ற ஊரில் தெருக்களிலும் நடக்க

(12-ம் பக்கம் பார்க்க)

வெல்லும் தரமுண்டு தமிழருக்கு இப்புவிமேலே!

ஓமந்தூராரே, ஒரு வார்த்தை

"நீங்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள்!"

"அப்படியா, மிக்க மகிழ்ச்சி. இப்பொழுதே புறப்படவேண்டுமா, கூட்டம் முடிந்த பிறகா ..."

"இப்பொழுதேதான்......"

"நான் மட்டுமா, நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் கூடவா, எப்படி உத்தரவு......"

"இங்கே இருக்கிற அத்தனை பேரையும்தான் கைது செய்யும்படி ஆணையிடப்பட்டிருக்கிறது."

"ஆஹா ரெடி! வாருங்கள எல்லோரும் போவோம்."

பெரியார், புன்னகை தவழும் முகத்தோடு, தன் படைத் தலைவர்களைப் பார்த்துக் கூறினார் இது போல! அவர் 'இந்த வார்த்தைகளைச் சொல்லி முடிக்கு முன்னரே விருந்து வந்ததென்று பெருங் களிப்புடன் எழுந்து "தயார்" கூறிக்கொண்டிருந்தனர் அந்த மாவீரர்கள்! சிறை என்ற சொல் கேட்டதும் பெரியாரின் முகம் புதுமலர்ச்சி பெற்றது. அவர் கண்களிலேயும் புத்தொளி வீசிற்று. அந்த அழகிய வெண்தாடிகூட கொஞ்சம் வேகமாகவும் களிப்போடும் அசைந்து ஆடிற்று. செக்கச் செவேலெனச் சிவந்த அந்த மேனியில் முழு நீளக் கருப்புச் சட்டை தவழ, அதன்மீது கருப்புத் துண்டு ஒன்று துள்ளி விளையாட, 'ஆத்திகத்தின் முதுகெலும்பை எடுத்ததுபோல்' அமைந்த கைத் தடியுடன், கறுக்கு மீசை வாலிபனைப்போல மடமட வென மாடிப் படிகளை இரண்டு மூன்றாகத் தாண்டி இறங்கினார், இறங்கினாரா இல்லை குதித்தார் தரை மீது, குடுகுடுவென ஓடிச் சென்று காரில் ஏறினார். சிறைச்சாலை அழைக்கிறது என்றால், உலகம், முகம் சுருங்கி வாடும். ஆனால் அந்த எழுபதாண்டுக் கிழவரோ பெறற்கரிய பேறு பெற்றார் போலத் துள்ளி மகிழ்ந்து ஓடினார் சிறைச்சாலை நோக்கி! மழை முகம் கண்ட பயிர்போல, கணவன் வரக் கண்ட காரிகையின் மனம்போல, நெடுங்காலம் பிரிந்திருந்த தந்தையைத் திடுமெனக் காணும் சேய் போல சிறை வாழ்வு தன் காலடியில் வந்து விழக்கண்டதும், பெரியார், பெருங் களிப்புக் கொண்டு விட்டார்! மடமடவென நடந்து விட்டார் சிறைச்சாலை இருக்கும் திக்கு நோக்கி!

அவர் போகிறார், அவரையும் முந்திச் செல்லவேண்டும், முதலில் சிறை புகும் பரிசு தனக்குத்தான் இருக்கவேண்டும் என்ற ஆவல் மிகுதியால் அவருடைய அருமைத் தளபதி வெகு வேகமாக அவரைப் பின் தொடர்ந்து வருகிறார். குள்ளமான உருவம், குறுகுறுத்த நடை, கணீர் என்ற குரல், தென்றல் போன்ற பேச்சு—தளபதி என்றால் தளபதியேதான் அவர் — கம்பீரமாக நடக்கிறார், கையில் ஏதோ ஒன்றை மறைத்து வைத்துக் கொண்டு! (என்னவாயிருக்கும் அது—வெற்றிலை பாக்குச் சுருளாயிருக்கும்—அது அவருடைய இணைபிரியாத் தோழனல்லவா!)

குறுஞ்சிரிப்புச் செய்தவண்ணம் தளபதி போகிறார் முன்னே அவருக்கு முன்னே நாம் செல்லவேண்டும் என்று பிறபடைத் தலைவர்கள் யாவரும் ஓட்டமும் நடையுமாகப் பின் தொடர்கின்றனர்—ஒரு புறம் ஆரிய வட்டாரத்திற்கோர் அணுக்குண்டு போன்ற குத்தூசியார், மற்றோர் புறம் திருச்சி வேதாசலம், இருவருக்குமிடையே அந்த ஏழையர் தோழன் அழகிரிசாமி—மூவர் தம் பின்னே அணி அணியாக பிற சேனாதிபதிகள்!

சென்னைச் "சிறை" 22-8-48 முதல் குதூகலத்தின் உறைவிடமாகவே மாறி விட்டிருக்கும், ஏனெனில் பெரியாரும் அண்ணாவும் பிற திராவிடத் தலைவர்களும் அன்று முதல் அங்குதானே இருக்க நேர்ந்து விட்டது! சிறை, அன்று வரைதான் சிறை! ஆனால் அதன் பின், அது, இன்பத் திராவிடம்! ஆமா
வேறென்ன? 22-8-48 முதல் தி
விடம் முழுவதுமே அங்குதானே
இருக்கிறது! யார் சொல்லமுடியு
இல்லையென்று!

22-8-48 ஞாயிறு காலை சென்
'பெரியார் மாளிகை' யில் தி
விடர் கழக பாசறைக் கூட்
நடந்துகொண்டிருந்தது! தமிழக
எங்கணுமிருந்து சேனைத் தலை
கள் அந்தப் பாடிவீட்டுக்கு வந்
கூடி இருந்தனர். அந்த மந்தி
லோசனை மாநாடு ஜரூராக நடந்
கொண்டிருந்த நேரத்திலேதான்
நாம் முதலிற் குறிப்பிட்டப
போலீஸ் உதவிக் கமிஷனர் தி
ரென உள் நுழைந்து நீங்கள் கை
யாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்
கூறினார்! பிறகு நடந்ததுதா
அந்த பெரியார்—கமிஷனர் உ
யாடல்.

இன்பத் திராவிடத்தின் மு
சூடா மன்னர், பெரியார்! நா
பெற்ற சிந்தனைச் சிற்பி! வரண்
வயலாகக் கிடந்த தமிழகத்
கதிர்கொழிக்கும் கழனியாக மா
றித் தந்த "செடிகொடிச் சித்தர்
நம் உள்ளங் கவர் கள்வர்! தமி
தம் தென்றல்! தலைவிதி த்த்துவ
தையே தம் வாழ்க்கை வழிகாட்
டியென நம்பிக் கிடந்த தமிழ
ரிடையே தன்னம்பிக்கை
ஊட்டிய தன்மானக் காவலன்
பகுத்தறிவுக் கருவூலம்! அவ
இன்று, தன் படைத்தலைவர் பெ
மக்களுடன் சிறையிலே இருக்
றார், தள்ளாத வயதிலே இரும்
கம்பிகளுக்குப் பின்னாலே கிடந்
வதைகிறார், இன்றைய ஆள
தார்களை ஆட்சிப் பீடத்திற்கு ஏ
றியவர் அவர்தான், என்றாலு
அச் செய்நன்றி கொன்றவர்க
ளிட்டிய மரத்திலேயே க
பார்த்துவிட்டனர், தம்மைக் க
கொடுத்துத் தூக்கிவிட்ட பெரி
ரையே நெஞ்சில் ஈரமின்றி வெ
சிறையில் புகுத்திவிட்டனர், பு
சித் தலைவருக்குக் கொடுந் த

தமிழுண்டு தமிழ்மக்களுண்டு இன்பத்

...ா கொடுத்துவிட்டனர்—பாவம்,
...ர்கள் தாம் செய்வது இன்
...து என்றறியாமல் குற்றம்
...ழக்கின்றனர், அவர்கள் மன்
...கப்படட்டும்—ஆனால் நம் முது
...ருந் தலைவர் பெரியார் சிறை
...் இருக்கிறாரே இது தகுமா,
...ழர், தம்மை உணர்த்திய தம்
...லவர் பெருந்தகையை சிறைக்கு
...னுப்பிவிட்டு சும்மா இருந்தனர்
...ற பழிச் சொல் நமக்கு வர
...் இடந்தரல் முறையா, பழுத்த
...மாயிற்றே பெரியார், ஆண்டு
...பதும் ஆகிவிட்டதே, தள்ளாத
...பதாயிற்றே, "ஏதேனும்
...று" நடந்தால் என்ன
.........ஐயோ நினைத்துப் பார்க்
...வ நெஞ்சு நடுங்குகிறதே......
...ற்கு ஒரு பரிகாரமில்லையா;
...ரியார், உள்ளே, சிறையிலே
..., நாம், திராவிடர்கள், அவ
...லே உருவாக்கப்பட்ட அவ
...டைய இளங்கன்றுகள் வெளி
...யும் இருப்பதா, இதுதான் நம்
...ளத்தை வாட்டுகிறது.
...பெரியாருக்கும் சிறையா?
...த ஓமந்தூராரர்களை பெரிய மனி
...களாக ஊரில் உலவவிட்ட அந்த
...தமத் தலைவருக்கும் சிறையா?
...ரமாயிரம் திராவிட இளைஞர்
... தங்கள் கண்ணின் மணியெ
... கருதிப் போற்றி வரும் அந்தக்
...ம வீரருக்கும் கொடுந் தண்ட
...யா? உறங்கிக் கிடந்த தமி
...த்தைத் தட்டி எழுப்பி, புரட்சிப்
...தையைக் காட்டி, இதுதான் நீ
...ல்லவேண்டிய பாதை என்று
... வகுத்துக் கொடுத்த ஈரோட்டு
...தலுக்கும் சிறைக் காவல் தண்
...யா? நாடு இந்த அளவுக்கா
...காடாகிவிட்டது? அமைச்சர்
... உள்ளம், ஐயகோ, இவ்வள
...கா தாழ்ந்துவிட்டது? அவி
...யார்களும் ஓமந்தூராரர்களும்
...கள் உள்ளங்களை செல்லரித்
... போன மரக்கட்டைகளாகவா
...ற்றி அமைத்துக் கொண்டுவிட்
...ர்? இல்லை எனில் தென்னாட்
... தீரரை—தமிழர்தம் மாவீரரை
...யாகத்தின் சிகரத்தைச் சிறை
...த்திருக்கும் இந்தக் கொடுஞ்
...பலுக்கு என்ன பொருள்?
...மந்தூராரே, ஒரு வார்த்தை.

வெள்ளையர் போகிறார், வடநாட்டவர் வருகிறார்!

சர் ஆர்ச்சிபால்டு நை போகிறார்! சர் கிருஷ்ண முக்கார் சின்ஜி பாவ் சின்ஜி வருகிறார்!

போகிறவர் வெள்ளையர்! வருகிறவர் வடநாட்டவர்!

போகிறவர் ஒரு சர்! வருகிறவரும் ஒரு சர்!

போகிறவர் ஒரு பிரபு! வருகிறவர் ஒரு மகாராஜா!

இந்தப் போவதும் வருவதும் செப்டம்பர் மாதம் நிகழ இருக்கிறது!

டில்லிப் பட்டணத்தில் வீற்றிருக்கும் **ஆரியத் தலைவர்** கனம் இராஜகோபாலாச்சாரியார் **வெள்ளைத் துரை** சர் ஆர்ச்சிபால்டு நையை விலக்கிவிட்டு **வடநாட்டுப் பவநகர் வேந்தர்** சர் கிருஷ்ண முகார்சின்ஜி பாவ்சின்ஜியை இன்பத் திராவிடத்தின் கவர்னராக இரும் என்று தாக்கீது அனுப்புகிறார்!

அந்தோ திராவிடமே, உன் நிலை இதுதானா? ஆண்டால் ஒரு வெள்ளையர் ஆளவேண்டும் உன்னை, இல்லையேல் ஒரு வடநாட்டுச் சிற்றரசர் ஆளவேண்டும் என்பதுதானா உன் கதி? உன்னை ஆள்வது வெள்ளையரா அல்லது வடநாட்டவரா என்பதை நிர்ணயிக்கும் உரிமை ஓர் ஆரியத் தலைவருக்கா? திராவிடமே, உன்னை ஆள உன் மக்கள் யாரும் இல்லையா? உனக்கு மீட்சி இல்லையா? இந்த வெள்ளையர்—வடநாட்டவர் மாற்றுச்சுரண்டலிலிருந்து உனக்கு விடுதலை கிடையாதா? உன் நாட்டுக்குக் கவர்னராக இருக்க உன் மகன் யாரும் இல்லையா? பொருளியல் வல்லுநர் சர். ஆர். கே. சண்முகம் கவர்னராக வரக்கூடாதா? அறிஞர்க்கு அறிஞர் சர் ஆர்க்காடு ராமசாமி கவர்னராக இருக்க முடியாதா? சிறந்த காவலர் சி. ஆர். ரெட்டி கவர்னரானால் அந்த வெல்வெட் நாற்காலியென்ன உடைந்தா போய்விடும்? மருத்துவ ஞாயிறு இலட்சுமணசாமி கவர்னரானால் மக்கள் நலம் என்ன கெட்டா போய்விடும்? பல்கலை நிபுணர் இரத்தினசாமிக்கும் அந்தப் பதவி பொருத்தமில்லையா? அரசியல் சாணக்கியர் ஆச்சாரியாரையே திக்குமுக்காடச் செய்த ராஜதந்திரி காமராஜருக்குத்தான் கொடுத்தாலென்ன கவர்னர் பதவியை? என்னை ஆள்வது யார் என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கில்லையே என்கிறாயா? திராவிடமே, உன் நிலை இவ்வளவுக்கா தாழ்ந்துவிட்டது! "ஆண்டால் வெள்ளையர் — இல்லையேல் வட

(அடுத்த பக்கம் பார்க்க)

நீர் எம் சிந்தனைச் சிற்பியைச் சிறைபிடித்துவிட்டீர். எங்கள் அறிஞர் அண்ணாவையும் உள்ளே தள்ளிவிட்டீர்; எங்கள் படைத் தலைவர்கள் நூற்றுவரையும் வெஞ்சிறை வாசம் செய்ம்மின் என அதிகார பலத்துடன் கூறிவிட்டீர். ஆம், எங்கள் நடுவேயிருந்து எங்களுக்கு வழிகாட்டிவந்த எங்கள் மாவீரர்களின் உடலங்களை யெல்லாம் எங்களிடமிருந்து பிரித்துவிட்டீர்—ஆனால் அவர்களின் உள்ளம்! அதை நீர் என்ன செய்ய முடியும்? அதுதான் எங்கள் உள்ளத்திலே டொரு உள்ளமாக—வீணையில் நாதம்போல, தென்றலில் இன்பம் போல, புரட்சியில் கிளர்ச்சிபோல, —இரண்டறக் கலந்துவிட்டதே! எங்கள் தலைவர்களை எங்களிடமிருந்து பறித்தெடுத்துவிட்டீர், மெய்தான், ஆனால் அவர்கள் எங்கள் நெஞ்ச ஏட்டில் பொறித்திருக்கும் சிந்தனைச் சித்திரங்களைப் பறித்தெடுத்தல் கூடுமோ உம்மால்? ஓமந்தூராரே வாரும், ஓய்வாக இருந்து சிந்தித்துப் பாரும், பிறகு தக்கதோர் பதில் கூறும்!

—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடாது தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நிலை வெகு காலமாக சமுதாயச் சட்டமாக இருந்து வந்தது. இதை எதிர்த்து 1924ல் அறப்போர் தொடங்கினர் கேரளத்தலைவர்கள். திடீரென்று ஒருவர்பின் ஒருவராக 19 தலைவர்களும் கைது செய்யப்பட்டுவிட்டனர். தலைவர்கள் இல்லை போராட்டத்தை நடத்த. போர் இதனால் நின்று போகுமோ என்ற ஐயம எல்லோர்க்கும் ஏற்பட்டுவிட்டது. இந் நிலையில் சிறைப்பட்ட தலைவர்கள் ஈ. வெ. ரா. வுக்கு இரகசியமாக வேண்டுகோள் விடுத்தனர், உடனே வந்து போரைத் தொடர்ந்து நடத்துக என்று விண்ணப்பம் செய்தனர். உடனே புறப்பட்டு வந்தார் பெரியார். போர் மிக மும்முரமாக நடைபெற்றது. திருவாங்கூர் சர்க்கார் பெரியாரைக் கைது செய்தனர். அருவிக் குத்தி சிறையில் இருத்தினர்.

மூன்றும் முறை சிறை வாசம்: போர் தொடர்ந்து நடந்தது. அன்னை நாகம்மையார் தலைமையில் திருவாங்கூர் முழுதும் புரட்சிப் புயல் வீசத் தொடங்கிவிட்டது. எங்கணும் எழுச்சி! எங்கணும் கிளர்ச்சி! யாண்டும் வைக்கம் போர் பற்றியே பேச்சு. 1924 ஜூன் மாதம் பெரியார் விடுவிக்கப் பட்டார். ஆனால் அடுத்த வாரமே மீண்டும் கைது செய்யப்பட்டு 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். ஆனால், போர், இறுதியில் பெருவெற்றி பெற்றது வைக்கம் தெருக்களில் தாராளமாக நடமாடும் உரிமை கிடைத்தது ஈழவர்க்கு! இந்தியாவில் முதன் முதல் வெற்றியைத் தந்த சத்யாக்கிரகம் வைக்கம் போர்தான். அந்தப் போருக்குப் பிறகு பெரியார் செல்லும் இடமெல்லாம் **வைக்கம் வீரரே வருக வருக** என்ற சொல் தானே எழலாயிற்று. வைக்கம் வீரர் என்ற சொல்லாலே அவரை அணி செய்து மகிழ்ந்தது தமிழகம். அந்த வைக்கத்துப் போராட்டம்தான் பிற்காலத்தில் திருவாங்கூர் கோயில்களை தீண்டாதார்க்குத் திறந்துவிட மூலகாரணமாயிருந்தது. "திருவாங்கூரில் கோயில் திறப்புக்குக் காரணம் என் நண்பர் பெரியார்தான் ஆனால் அப்புகழ் வேறு யாருக்கோ போயிற்று' என்றார் திரு. வி. க. ஓர் முறை. ஆம், அது உண்மை! வைக்கத்தில் வீரப் போர் விளைத்து தீண்டாதார்க்கு உரிமை தேடித் தந்தவர் பெரியார்! ஆனால் கோயில் நுழைவுக்கான புகழும் பாராட்டும் பெற்றவர் சர். சி. பி. ராமசாமி அய்யர்!

நான்காம் முறை: திருவாங்கூரிலிருந்து ஈரோட்டுக்குத் திரும்பினாரோ இல்லையோ, 11-9-1924ல் சென்னை சர்க்காரால் பெரியார் 124 A பிரிவுப்படி கைதியாக்கப் பட்டார். காரணம், ஏன் கதர் உடுத்தவேண்டும் என்பது பற்றி அவர் அக்காலத்தில் ஆற்றிய காரசாரமான சொற்பொழிவுகள்! தமிழ்நாட்டில் கதரை நுழைத்த வரும் பெரியார்தான். பின்னால் அது பொருளாதார மூடநம்பிக்கை என்று தெரிந்ததும் தமிழகத்திலிருந்து அதனை விரட்டியடித்த வரும் பெரியார்தான். தமிழ் நாட்டுக் கதர் இயக்கத்திற்கு அவரைத் தான் தந்தை என்று கூறவேண்டும். அவரையேதான் அதன் 'எமன்' என்றும் கூறவேண்டும்.

ஐந்தாம் முறை: 1926-ல் நாகை ரயில்வே ஸ்டிரைக்கில் ஈடுபட்டு தொழிலாளர்களைத் தூண்டிய குற்றத்திற்காக ஐந்தாம் முறையாக சிறைவாழ்க்கைப்பரிசு பெற்றார் பெரியார். பல்வேறு தொழிலாளர் தலைவர்கள் வெறும் கூலி உயர்வுக்காகவும் வேலை நேரக் குறைப்புக்காகவும் மட்டும் போராடிக் கொண்டிருந்த காலத்தில், லாபத்திலும் மூலதனத்திலும் தொழிலாளருக்குப் பங்கு வேண்டும் என்ற மூலாதாரக்கோரிக்கையைப்பெரியார்எழுப்பினார்;பெரியார்தான் எழுப்பினார்.

ஆறும் முறை: சோஷலிச ஆட்சியே நமக்குத் தேவை என்பதை வலியுறுத்தி வந்தார் குடிஅரசு இதழ் மூலம் என்ற குற்றத்திற்காக 30-12-1933ல் மீண்டும் சிறை பிடிக்கப்பட்டார். இம்முறை 6 மாத தண்டனையும் 300 ரூபா அபராதமும் அவர் பெற்ற "அன்பளிப்புக்கள்."

ஏழாம் முறை: கடன் பாக்கிக்காக என்று சிறை பிடிப்பது சரியல்ல என்ற தத்துவத்தை நிலை நாட்ட 1934ல் ஒரு முறை பெரியார் சிறைபுக நேர்ந்தது.

எட்டாம் முறை: அன்பர் ஆச் சாரியார் சென்னை மாநில அமைச் சராக இருந்தபோது மூண் டெழுந்த இந்தி எதிர்ப்புப் போராட் டத்தில் தாய்மார்களைச் சிறைபுகத் தூண்டிய குற்றத்திற்கா 2 ஆண்டு கடுங்காவலும் 2000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டார். இது, 1938 டிசம்பர் மாதம்!

ஒன்பதாம் முறை: இன்று 1948 ஆகஸ்டு மாதம் ஓமந்தூரார் ஆட்சி யினால் விசாரணையின்றிக் காவ லில் வைக்கப்பட்டிருக்கிறார். விசா ரணையின்றி அவர் காவலில் வைக் கப்படுவது இதுதான் முதல் முறை! வெல்லிங்டன்களை கவ னர் ஜெனரல்களாகக் கொண் டிருந்த வெள்ளையர் ஆட்சியும் ஆரிய இனத்திலே வந்த ஆச்சா யார் ஆட்சியும், அடக்கு முறை கொடுமைக்குப் பெயர்போன திரு வாங்கூர் ஆட்சியும் செய்யத் துணி யாத காரியத்தை இன்று திராவிட இனத்திலே வந்த ஓமந்தூரா திராவிடத் தலைவருக்கே செய்து முடித்துவிட்டார்! வெட்கம் வெட்கம்!

எட்டு முறை சிறைசென்ற மாவீ ரர் பெரியார். அவரை மற்றுமோ முறை சிறை வைப்பதாலே அவரு டைய இலட்சியம்சிதைந்துவிடாது அவருடைய இலட்சிய பூமிக்கும் அவருக்கும் இடையே உள்ள தூர தான் குறையும், இதை நினைவில் கொள்ளட்டும் சென்னை சர்க்கார் சிறைக்கஞ்சா சிங்கத்தை சிறை கோட்டம் அனுப்பியது தங்கள் ம திரி சபைக்குத் தாங்களே சவ குழி தோண்டிடும் செயல் தவி வேறில்லை என்பதையும் அறிய டும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாட்டவர்''—இதுவா உன் வாழ் கைச் சட்டம்?

எழிலுள்ள திராவிடநாடே எடுப்பார் கைப்பிள்ளை ஆனே உனக்கு என்றுதான் விடுத உண்டோ? யார் அறிவார்?

வெள்ளையர் போகிறார், வடநா டவர் வருகிறார், திராவிட நாட்டிற் ஒரு திராவிட கவர்னர் வரமுடி வில்லை! செ! என்ன வெட் கேடு!

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon